# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## மதிப்பீட்டுத் தாள் 2024 – 2025

## வளர்தமிழ் 8

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com
Tamil Education Development Council
France

# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. தேவாரம், திருவாசகம் போன்றன ____________ இலக்கியங்கள் ஆகும்.

அ) கிறித்தவநெறி ☐ ஆ) இசுலாமியநெறி ☐

இ) வைணவநெறி ☐ ஈ ) சைவநெறி ☐

2. ஆசுகவி என்பதன் சொற்பொருள்

அ) வசைப்பாடல் ☐ ஆ) இசைப்பாடல் ☐

இ) தொழிற்பாடல் ☐ ஈ ) தாலாட்டுப்பாடல் ☐

3. விளிவேற்றுமை என அழைக்கப்படுவது

அ) முதலாம் வேற்றுமை ☐ ஆ) நான்காம் வேற்றுமை ☐

இ) எட்டாம் வேற்றுமை ☐ ஈ ) ஆறாம் வேற்றுமை ☐

4. முப்பேரும் பெற்றது

அ) நீர் ☐ ஆ) மோர் ☐

இ) பால் ☐ ஈ ) தயிர் ☐

5. தமிழ் மண்ணில் முதன்முதலாகக் கரும்பைக் கொண்டுவந்து விளைவித்தவர்

அ) கபிலர் ☐ ஆ) பாரி ☐

இ) அதியர்மான் ☐ ஈ ) காரி ☐

6. மதிமுகம் என்ற உவமையணியின் பொதுத்தன்மை

அ) முகம் ☐ ஆ) போன்ற ☐

இ) மதி ☐ ஈ ) அழகு ☐

7. ''கார்காலம் வரவும் வானம் கவிழ்ந்தது.. ''என்ற பாடலைப் பாடியவர்

அ) பாரதியார் ☐ ஆ) உருத்திரமூர்த்தி ☐

இ) பாவேந்தர் ☐ ஈ) ஔவையார் ☐

8. நீங்கள் + உடன்

அ) நீங்களுடன் ☐ ஆ) அவர்களுடன் ☐

இ) உங்களுடன் ☐ ஈ) எங்களுடன் ☐

9. பண்டாரவன்னியன் விழுப்புண்பட்ட இடம்

அ) உடையாவூர் ☐ ஆ) முல்லைத்தீவு ☐

இ) முள்ளியவளை ☐ ஈ) பனங்காமம்பற்று ☐

10. நூலின் தொடக்கத்தில் அந்நூலை அறிமுகப்படுத்தி எழுதும் உரை

அ) பொழிப்புரை ☐ ஆ) அணிந்துரை ☐

இ) பதிப்புரை ☐ ஈ) முன்னுரை ☐

11. செம்மை + தமிழ்

அ) செம்தமிழ் ☐ ஆ) செந்தமிழ் ☐

இ) செய்ந்தமிழ் ☐ ஈ) செம்மைத்தமிழ் ☐

12. சற்று வளர்ந்த இலையின் பருவம்

அ) பழுப்பு ☐ ஆ) கொழுந்து ☐

இ) தளிர் ☐ ஈ) சருகு ☐

13. ஔவையாருக்குச் சிறுவன் கொடுத்த பழம்

அ) நாவற்பழம் ☐ ஆ) மாம்பழம் ☐

இ) இலந்தைப்பழம் ☐ ஈ) விளாம்பழம் ☐

14. அஃறிணை வினைச்சொல்லுக்கு எடுத்துக்காட்டு

அ) ஓடுகின்றான் ☐ ஆ) ஓடுகின்றாள் ☐
இ) ஓடியது ☐ ஈ ) ஓடினர் ☐

15. “ பூவினுக்கு அருங்கலம் பொங்கு தாமரை” என்ற பாடலைப் பாடியவர்

அ) திருஞானசம்பந்தர் ☐ ஆ) திருநாவுக்கரசர் ☐
இ) மாணிக்கவாசகர் ☐ ஈ ) சுந்தரர் ☐

16. ஐ,ஆல்,கு போன்றன

அ) வினா எழுத்துகள் ☐ ஆ) சுட்டெழுத்துகள் ☐
இ) மெய்எழுத்துகள் ☐ ஈ ) வேற்றுமை உருபுகள் ☐

17. அழகாகப் பாட்டுப் பாடினாள். என்ற சொல்லியத்தின் தோன்றா உறுப்பு

அ) செயப்படுபொருள் ☐ ஆ) பயனிலை ☐
இ) எழுவாய் ☐ ஈ )அடைமொழி ☐

18. நிலைமொழியும் வருமொழியும் எவ்வித மாற்றமுமின்றிப் புணர்வது

அ) கெடுதல் ☐ ஆ) இயல்பு ☐
இ) திரிதல் ☐ ஈ ) தோன்றல் ☐

19. சொல்லின் முதலிலும் இறுதியிலும் வரும் வினா எழுத்து

அ) எ ☐ ஆ) ஓ ☐
இ) ஏ ☐ ஈ ) ஆ ☐

20. 'ஒல்காப் பெரும் புகழ்' எனப் புகழப்பட்ட நூல்

அ) புறநானூறு ☐ ஆ) தொல்காப்பியம் ☐

இ) சிலப்பதிகாரம் ☐ ஈ ) திருக்குறள் ☐

21. பெங்சூற்றர் கோட்டை அமைந்துள்ள இடம்

அ) வெற்றிலைக்கேணி ☐ ஆ) ஆனையிறவு ☐

இ) யாழ்ப்பாணம் ☐ ஈ ) பூநகரி ☐

22. எட்டுத்தொகை நூல்கள் ____________ காலத்தில் தோன்றியவையாகும்.

அ) இடைக்கழக ☐ ஆ) முதற்கழக ☐

இ) கடைக்கழக ☐ ஈ ) முக்கழக ☐

23. பாடுகிறது என்ற வினைச்சொல்லின் விகுதி

அ) பாடி ☐ ஆ) கிறு ☐

இ) அது ☐ ஈ ) பாடு ☐

24. பொலபொல என்பது

அ) அடுக்குத்தொடர் ☐ ஆ) இரட்டைக்கிளவி ☐

இ) இணைமொழி ☐ ஈ ) அடுக்கிடுக்குத்தொடர் ☐

25. பண்டாரவன்னியனை ஆங்கிலேயருக்குக் காட்டிக் கொடுத்தவன்

அ) வன்னியன் ☐ ஆ) கதிர்காமநாயகம் ☐

இ) வருணன் ☐ ஈ ) வன்னியத்தேவன் ☐

புள்ளிகள் 25

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகியவை தமிழில் தோன்றிய ஐம்பெருங்காப்பியங்கள் ஆகும். இவற்றுள் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள். ஐம்பெரும் காப்பியங்களுக்குப் பெண்கள் அணியும் அணிகலன்களின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. அதில் மேகலை எனப்படுவது மங்கையர் இடையில் அணியும் இடைநாண் ஆகும். மணிமேகலை என்னும் நூல் கோவலன், மாதவியின் மகளாகிய மணிமேகலையின் வரலாற்றைக் கூறுகின்றது. இக் காப்பியத்தின் கதை முழுவதும் காப்பியத்தலைவி மணிமேகலையை முதன்மையாகக் கொண்டு எழுதப்பட்டதால் மணிமேகலை எனப் பெயர் பெற்றது. இக்காப்பியத்தை எழுதியவர் சீர்த்தலைச்சாத்தனார். இந்நூல் பசியால் வாடுவோருக்கு உணவு அளித்துக் காப்பதைச் சிறந்த அறமாகக் கொண்டது. மணிமேகலை என்னும் நூல் இளமை, யாக்கை, செல்வம் என்பன நிலையற்றவை எனக் கூறுகின்றது.

1. இரட்டைக் காப்பியங்கள் எவை?

______________________________________________

______________________________________________

2. மணிமேகலை எதை சிறந்த அறமாகக் கொண்டது?

______________________________________________

______________________________________________

3. மணிமேகலையை எழுதியவர் யார்?

______________________________________________

______________________________________________

4. மணிமேகலை என்னும் நூல் எவை நிலையற்றவை எனக் கூறுகின்றது?

______________________________________________

______________________________________________

5. மேகலை எனப்படுவது யாது?

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 10

## 3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. பண்டாரவன்னியனிடம் படை உதவி பெற்றுக் கொண்ட கண்டி மன்னன் யார்?

_______________________________________________

2. அதியர்மான் காட்டிலிருந்து அரண்மனைக்கு வந்தவுடன் யாரை அழைத்தான்?

_______________________________________________

3. நான்கு பக்கமும் நீரால் சூழப்பட்ட பகுதியை எவ்வாறு அழைப்பர்?

_______________________________________________

4. நாதகுத்தனார் எழுதிய நூலின் பெயர் என்ன?

_______________________________________________

5. பண்டாரவன்னியனின் இயற்பெயரைத் தருக.

_______________________________________________

6. உலகின் முதன்மொழி தமிழே என்று நிறுவியவர் யார்?

_______________________________________________

7. காட்டுமல்லிகை எங்கே மலர்ந்தது?

_______________________________________________

புள்ளிகள் 10

**4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்து, கவிதையை முழுமையாக்குக.**

# தமிழ்மொழி

| | | | | |
|---|---|---|---|---|
| வள்ளுவனை | ஆதியில் | புகழ் | தந்திடும் | குன்றா |

அறம் வளர்க்கும் அமுதமொழி
__________________ தோன்றிய மொழி
இளமை __________________ மொழி
ஈடில்லாத் தொன்மை மொழி

உயிருடன் கலந்த மொழி
ஊக்கமதைத் __________________ மொழி
எத்திக்கும் நிறைந்த மொழி
ஏற்றம் பெற உதவும் மொழி

ஐயன் என்ற __________________ க் கொடுத்த மொழி
ஒற்றுமையை வளர்க்கும் மொழி
ஓங்கு __________________ பெற்ற மொழி
ஔவை வளர்த்த மொழி
அதுவே எங்கள் செம்மொழியாம் தமிழ்மொழி

புள்ளிகள் 05

## 5) அ) பந்தியை வாசித்து இலக்கண வினாக்களுக்கு விடை எழுதுக.

புல்வெளிக்கு அருகே அடர்ந்த காடு ஒன்று இருந்தது. அக்காட்டின் நடுவே அழகான ஏரி ஒன்று காணப்பட்டது. ஏரியில் இருந்த புதர்களில் ஒரு வாத்து முட்டைகளை இட்டு அடைகாத்துக் கொண்டிருந்தது. மற்றைய வாத்துகள் ஏரிகளில் உள்ள சிறிய மீன்களைக் கொத்திக்கொத்தித் தின்று கொண்டிருந்தன. அவ்வேளை அங்கு வந்த மக்களின் குரல் கேட்டு வாத்துகள் அச்சத்தினால் அங்கும்இங்கும் சிதறி ஓடுகின்றன.

1. பலவின்பாற் சொல் ஒன்று எழுதுக.

_______________________________________________

2. மூன்றாம் வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைத் தருக.

_______________________________________________

3. வினையெச்சம் ஒன்று தருக.

_______________________________________________

4. இறந்தகால வினைமுற்று ஒன்று தருக.

_______________________________________________

5. இடப்பெயர் ஒன்று தருக.

_______________________________________________

புள்ளிகள் 10

ஆ) 1. தரப்பட்டுள்ள வினைமுற்றுகளின் காலங்களையும் இடைநிலைகளையும் கண்டறிந்து எழுதுக.

| | காலம் | இடைநிலை |
|---|---|---|
| தேடினான் | | |
| ஓடுகிறது | | |

புள்ளிகள் 02

2. தரப்பட்ட சொல்லுடன் வேற்றுமை உருபுகளைப் புணர்த்தி எழுதுக.

| | ஐ | அது | கு |
|---|---|---|---|
| நான் | | | |

புள்ளிகள் 03

6) **மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

1. நாங்கள் ____________________ யில் ஏறிக்கொண்டிருந்த போது ____________________ பெய்து கொண்டிருந்தது.

   ( மழை, மலை )

2. முற்றத்தில் மலர்ந்த மல்லிகை ____________________ வீசியது. அதைப் பார்த்து என் ____________________ மகிழ்ந்தது.

   ( மனம், மணம் )

3. ____________________ யில் பறவைகள் கூட்டங்கூட்டமாகப் பறந்து சென்றன. அவ்வேளை உழவன் ____________________ பூட்டி வயலை உழுதான்.

   ( காலை, காளை )

4. வேடன் வில்லை வளைத்து புறாவுக்கு ____________________ எய்தான். அவன் வீட்டிற்கு வந்ததும் களைப்பினால் குளிர் ____________________ அருந்தினான்.

   ( பானம், பாணம் )

5. வளவன் ____________________ மாதத்தில் பிறந்தான். அவன் தனது படத்தைச் சுவரில் உள்ள ____________________ யில் கொழுவினான்.

   ( ஆனி, ஆணி )

புள்ளிகள் 05

**7) பந்தியை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

**நாம் தூய்மையாக இருக்க வேண்டும். நாம் தூய்மையாக இருப்பதற்கு எம்மைச் சுற்றியுள்ள இடங்களையும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். எம்மில் சிலர் குப்பைகளை வெளியே போடுகின்றனர். இதனால் நுண்ணுயிரிகள் பெருகி நோய்கள் பரவுகின்றன. எனவே நாம் நோயின்றி வாழ தூய்மையைக் கடைப்பிடிப்போம்.**

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

புள்ளிகள் 05

**8) பழமொழிகளுக்குப் பொருத்தமான சொற்களை வைத்து நிறைவு செய்க.**

1. ______________________ இருந்தால் தானே அகப்பையில் வரும்.

2. விளையும் பயிரை ______________________ தெரியும்.

3. குடிப்பது கூழ் கொப்பளிப்பது ______________________ .

4. குற்றமுள்ள ______________________ குறுகுறுக்கும்.

5. மனமுண்டானால் ______________________ .

புள்ளிகள் 05

**9) பொருத்தமான சொல்லை வைத்து குறளை நிறைவு செய்க.**

1. நன்றி ______________________ நன்றன்று நன்றல்லது

அன்றே மறப்பது நன்று

( மறப்பது, இறப்பது, கறப்பது )

2. மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை

______________________ கொல்லெனுஞ் சொல்

( கண்ணோற்றான், என்னோற்றான், விண்ணோற்றான் )

புள்ளிகள் 05

**10) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ தமிழ் இலக்கிய வளம்
- ✸ தமிழுக்குத் தந்த கனி
- ✸ பொழுதுபோக்கு
- ✸ மழைநாள்

புள்ளிகள் 15